| | | **தொகை**<br>1) திரு எஸ்.வி. ஜெயசீலன் ரூ 585000/–<br>27 வாணியன்விளை தெற்கு தெரு, தூத்துக்குடி.<br>2) திரு எம். எஸ். சாமுவேல் ரூ. 550000/–<br>40பி/4. தாமோதர நகர், தூத்துக்குடி.<br>மேற்படி இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –** மேற்படி உரிமத்திற்கு 18–3–2010ம் தேதிய ஏலத்தில் திரு எம்.எஸ். சாமுவேல் என்பவர் ரூ 500000/–க்கும் 24–3–2010ம் தேதிய இரண்டாம் ஏலத்தில் திரு.எஸ்.வி. ஜெயசீலன் என்பவர் ரூ 580000/–க்கும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி உயர்ந்தபட்ச கேள்விகள் கடந்த ஆண்டு ஏலத்தொகையான ரூ. 665200/– மூன்றாண்டு சராசரியான ரூ 663533/– விட குறைவாக இருந்ததால் மூன்றாம் முறையாக 29–3–2010ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு எஸ். வி. ஜெயசீலன் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ. 585000/– கோரியுள்ளார்.<br>அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வி ரூ. 585000/– என்பது கடந்த ஆண்டு தொகையை விட ரூ. 80200/– ம் மூன்று ஆண்டு சராசரியை விட ரூ. 78533/–ம் குறைவாக உள்ளது.<br>மூன்று முறையும் ஏலம் நடத்தப்பட்டும் பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியும் இருவர் தவிர வேறு நபர்கள் கொடுக்கவில்லை. மாநகராட்சி மூலம் அலுவலக வசூல் மேற்கொண்டால் மூன்று பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியமர்த்த வேண்டியுள்ளது. அதற்கு ஊதிய செலவு உத்தேசமாக நபர் ஒன்றுக்கு மாத ஊதியம் ரூ 10120/– வீதம் 3 பணியாளர்களுக்கு ஓராண்டிற்கு (ரூ.10120 X 3 X 12 = 364320.00) செலவாகும். இதனால் மாநகராட்சிக்கு கூடுதல் செலவினமே ஏற்படுகிறது. அலுவலக வசூல் மேற்கொள்ளும் பட்சத்தில் ஏற்படும் நிதியிழப்பு ரூ 364320/– ஆகும். எனவே கடந்த ஆண்டு தொகையான ரூ. 665200/–ல் பணியாளர் ஊதியம் ரூ 364320/– போக ரூ 300880/– தான் மாநகராட்சிக்கு வருவாயாக கிடைக்க வாய்ப்புள்ளது.<br>ஆனால் தற்போது திரு எஸ்.வி. ஜெயசீலன் என்பவரின் ரூ 585000/–க்கான ஒப்பந்தப்புள்ளியின் படி ரூ 585000/– முழுமையாக மாநகராட்சிக்கு கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே திரு எஸ்.வி. ஜெயசீலன் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 585000/–ஐ மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.<br>அ16/1059/2009 | |
| | 30 | இம்மாநகராட்சி, சிறப்பு நிலை நகராட்சியிலிருந்து 05–08–2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மாநகராட்சி அளவு கோலின்படி பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள இம்மாமன்றம், தீர்மானம் எண். 410, 411 நாள் 14–07–2008 மற்றும் 162 நாள் 30–10–08ல் புதிய பணியிடங்கள் தோற்று விக்கவும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் புதிய பணியிடங்களுக்கு பிரேரனை, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழிமுறையாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண். 38180/2008/மாநஅ1 நாள் 09–03–2010ல் கீழ்க்கண்ட பணியிடங்களை தோற்றுவிக்க அனுமதித்து பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பியுள்ளது. | 97) அலுவலகக் குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது |

| | | நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட பணியிடம் மற்றும் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | **பணியிடத்தின் பெயர்** | **எண்ணிக்கை** | | |
| **பொது பணியமைப்பு** | | | | | |
| 1 | உதவி ஆணையர் (பணியமைப்பு) | -- | -- | 1 | 1 |
| 2 | நிர்வாக அலுவலகர் | மேலாளர் | 1 | -- | 1 |
| 3 | கணக்கு அலுவலர் | வருவாய் அலுவலர் | 1 | | |
| | | கணக்கர் | 1 | | |
| 4 | பொது மக்கள் தொடர்பு அலுவலர் | -- | -- | 1 | 1 |
| 5 | கண்காணிப்பாளர் | -- | -- | 2 | 2 |
| 6 | உதவி வருவாய் அலுவலர் | -- | -- | 2 | 2 |
| 7 | உதவியாளர் / வருவாய் ஆய்வாளர் | உதவியாளர் | 10 | | |
| | | வருவாய் ஆய்வாளர் | 3 | | |
| 8 | நேர்முக உதவியாளர் | | -- | 1 | 1 |
| 9 | இளநிலை உதவியாளர் / | இளநிலைப் உதவியாளர் | 37 | | |
| | | தட்டச்சர் | 3 | | |
| 10 | சுருக்கெழுத்தர் | -- | -- | 1 | 1 |
| 11 | கணணி உதவி திட்ட அமைப்பாளர் | கணணி உதவி திட்ட | 1 | -- | 1 |
| 12 | புள்ளி விபர கணணி தொகுப்பாளர் | புள்ளி விபர கணணி | 1 | 1 | 2 |
| 13 | வரி வசூலிப்பவர் | வருவாய் உதவியாளர் | 30 | 0 | 30 |
| 14 | ஓட்டுநர் | வாகன ஓட்டுநர் பொது சுகாதாரம் | 19 | | |
| | | வாகன ஓட்டுநர் பொறியில் பிரிவு | 5 | | |
| 15 | பதிவறை எழுத்தர் | பதிவறை எழுத்தர் | 3 | -- | 3 |
| **பொறியர் பிரிவு** | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பொறியர் பிரிவு** | | | | | |
| 1 | மாநகராட்சி பொறியாளர் | -- | -- | 1 | 1 |
| 2 | செயற் பொறியாளர் | செயர் பொறியாளர் | 1 | -- | 2 |
| 3 | செயற் பொறியாளர் (திட்டம்) | முதுநிலை நகரமைப்பு அலுவலர் | 1 | | |
| 4 | உதவி செயற் பொறியாளர் | -- | -- | 2 | 2 |
| 5 | உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் | இளநிலைப் பொறியளார் | 2 | 8 | 19 |
| | | இளநிலைப் பொறியாளர் (பணிமனை) | 1 | | |
| | | மின் கண்காணிப்பாளர் நிலை - 1 | 3 | | |
| | | உதவி நகரமைப்பு அலுவலர் | 1 | | |
| | | நகரமைப்பு ஆய்வாளர் | 4 | | |
| 6 | தொழில்நுட்ப உதவியாளர் | படம் வரைவாளர் | 2 | 15 | 17 |
| 7 | செயல்திறன் உதவியாளர் நிலை 1 | தலைமை நீரேற்று நிலை மின் பணியாளர் நிலை 1 | 1 | 8 | 10 |
| | | பைப் லைன் பிட்டர் நிலை 1 | 1 | | |
| 8 | செயல்திறன் உதவியாளர் நிலை 2 | .மின் பணியாளர் நிலை 2 | 4 | 56 | 71 |
| | | குழாய் ஆய்வாளர் | 5 | | |
| | | மின் கம்பியாளர் | 3 | | |
| | | பணி ஆய்வாளர் | 3 | | |
| 9 | செயல்திறனற்ற பணிய்ாளர்கள் | தோட்டக்காரர் | 9 | 44 | 94 |
| | | மின்கம்பி உதவியாளர் | 6 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சாலைப் பணியாளர் | 11 | | |
| | | தச்சர் மற்றும் கொல்லர் | 1 | | |
| | | துருத்தி ஊதுனர் | 1 | | |
| | | மெக்கானிக் ஹெல்பர் | 3 | | |
| | | திருப்புனர் | 4 | | |
| | | பிட்டர் கூலி | 3 | | |
| | | குடிநீர் விநியோக பணியாளர் | 2 | | |
| | | கேங்க் மஸ்தூர் | 10 | | |
| **<u>பொது சுகாதாரம்</u>** | | | | | |
| 1 | மாநகர் நல அலுவலர் | நகர்நல அலுவலர் | 1 | -- | 1 |
| 2 | மருத்துவ அலுவலர் | மருத்துவ அலுவலர் | 5 | -- | 5 |
| 3 | துப்புரவு ஆய்வாளர் | துப்புரவு ஆய்வாளர் | 14 | -- | 14 |
| 4 | பெண் செவிலியர் | -- | -- | 1 | 1 |
| 5 | மருந்தாளுனர் | மருந்தாளுனர் | 1 | -- | 1 |
| 6 | சுகாதாரப் பார்வையாளர் | சுகாதாரப் பார்வையாளர் | 4 | -- | 4 |
| 7 | துப்புரவு பணி மேற்பாாவையாளர் | துப்புரவு பணி மேற்பாாவையாளர் | 28 | - | 44 |
| | | மலேரியா ஆய்வக உதவியாளர் | 1 | | |
| | | மலேரிய தலைமை பணியாளர் | 15 | | |
| 8 | பலநோக்கு சுகாதாரப் பணியாளர் | பலநோக்கு சுகாதாரப் பணியாளர் | 22 | -- | 40 |
| | | மகப்பேறு உதவியாளர் | 18 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | பெண் உதவியாளர் | பெண் உதவியாளர் | 3 | -- | 3 |
| **அடிப்படை பணிகள்** | | | | | |
| 1 | | அலுவலக உதவியாளர் | 16 | - | 16 |
| | | காவலர் | 1 | 5 | 6 |
| 1 | | வாகன துலக்குனர் (பொறியர் பிரிவு) | 6 | - | 6 |
| | | ஊற்றுக் கிளீனர் | 1 | - | 1 |
| | | பம்ப் கிளீனர் | 8 | - | 8 |
| | | மேல்நிலை தொட்டி ஆப்ரேட்டர் / காவலாளி | 3 | - | 3 |
| | | மகப்பேறு ஆயா | 14 | - | 14 |
| | | வாகன துலக்குனர் (பொது சுகாதாரம்) | 7 | - | 7 |
| | | அலுவலக உதவியாளர் (பொது சுகாதாரம்) | 3 | - | 3 |
| | | துப்புரவு பணியாளர் | 436 | - | 436 |
| | | துப்புரவு பணியாளர் (மருந்தகம்) | 2 | 1 | 3 |
| | | மலேரியா பணியாளர் | 45 | - | 45 |
| **மொத்தம்** | | | **851** | **159** | **1010** |

மேற்கண்டுள்ள விபரப்படி இம்மாநகராட்சி, சிறப்பு நிலை நகராட்சியாக இயங்கிய போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 851 மற்றும் தற்போது மாநகராட்சிக்காக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் இயக்கும் நிலையில் கூடுதலாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட மத்திய அலுவலகத்திற்கான (main office) 159 பணியிடங்களும் மொத்தம் 1010 பணியிடங்களுக்கு அனுமதியும், அதற்காகும் பணிக்குழு செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **அ னு ம தி க் க லா ம்** சி1 / 21375 / 2008

| | | | |
|---|---|---|---|
| | 31 | இம்மாநகராட்சி, சிறப்பு நிலை நகராட்சியிலிருந்து 05–08–2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மாநகராட்சி அளவு கோலின்படி பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள இம்மாமன்றம், தீர்மானம் எண். 410, 411 நாள் 14–07–2008 மற்றும் 162 நாள்<br><br>30–10–08ல் புதிய பணியிடங்கள் தோற்று விக்கவும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் புதிய பணியிடங்களுக்கு பிரேரனை, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழிமுறையாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண். 38180/2008/மாநஅ1 நாள் 09–03–2010ல் மாநகராட்சி மத்திய அலுவலகத்திற்கு கூடுதலாக | 98) அலுவலகக் குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 159 பணியிடங்கள் தோற்றுவிக்க பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>தற்போது புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களில் வணக்கதிற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவாகளுக்கு தலைமை அலுவலக உதவியாளர்கள் பணியிடம் மிகவும் அவசியமானதாகும், மேற்கண்ட 159 பணியிடங்களில் தலைமை அலுவலக உதவியாளர் பணியிடம் சேர்க்கப்படவில்லை. எனவே 2 (இரண்டு) தலைமை அலுவலக உதவியாளர் பணியிடம் மிகவும் அத்தியாவசியமாக இருப்பதால், இரண்டு தலைமை அலுவலக உதவியாளர் பணியிடங்களை தோற்றுவிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் அரசின் அனுமதி பெற பிரேரனை சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :</u>** **அ னு ம தி க் க லா ம்** சி1 / 21375 / 2009 | |
| | 32 | தூத்துக்குடி மாநகராட்சி பாளையங்கோட்டை ரோடு ஏ.வி.எம். மருத்துவ மனை வளாகம் மேற்கு பகுதியில் கதவு எண் 135வார்டு எண் 4 பிளாக் எண். 22 நகரளவுச எண். 3481 / 1, 2, 3, 4,5,6, 3482, 3490 பகுதியில் 184 & 130 அளவில் மாநகராட்சி அனுமதியின்றி தரைதளம், முதல் தளம், இரண்டாவது தளம், மூன்றாவது தளம் மற்றும் நான்காவது தளம் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. அனுமதியில்லா கட்டிடத்திற்கு தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 296 (1) (2)ன் படி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அறிவிப்பின்படி கட்டுமானத்தை நிறுத்தாமலும் அப்புறப்படுத்தாமலும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டிடம் பணி மேலும் தொடராமல் இருக்க மாமன்ற வழக்கறிஞர் மூலம் தடை ஆணை பெறவும் வழக்கு தொடரவும் வழக்கிற்கான செலவுகளுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். எப்3. 23095/2008 | 99) அலுவலகக் குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது |
| | 33 | தூத்துக்குடி மாநகராட்சி டூவிபுரம் 6வது தெரு மற்றும் ஜெயராஜ் ரோடு சந்திப்பில் வார்டு 4 பிளாக் 28 நகரளவு எண் 3810, 3811 கதவு எண் 17 எ/1 ல் பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடம் தரை கீழ் தளம் தரைதளம் முதல் தளம் இரண்டாவது தளம் மூன்றாவது தளத்துடன் கூடிய உணவகம் மற்றும் தங்கும் விடுதி கட்டிடம் கட்ட க.வி. எண். 113/05/ஜி3 நாள் 16–1.2006ன்ள படி கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிட அனுமதி காலம் 15–1–2009 உடன் முடிவுற்றுள்ளது. மேலும் அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடம் கட்டாமல் அனுமதிக்கு மாறுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கட்டிடத்தில் நான்காவது தளம் ஐந்தாவது தளம் மற்றும் 6வத தளம் கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்டு வருவதற்கு தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 296 (1) (2)ன் படி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது தொடர்ந்து உறுதி செய்யப்பட்டஅறிவிப்பும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கட்டிட பணி தொடர்ந்து நடைபெறுவதால் அதனை நிறுத்த தடையுத்திரவு கோரி தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மாமன்ற வழக்கறிஞர் மூலம் வழக்கு தொடரவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். எப்3. 1338/2008 | 100) அலுவலகக் குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது |
| | 34 | தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனங்கள் 2010–11 முதல் 2012–13 முடிய உள்ள கால அளவிற்கு 18–3–2010ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெற உள்ளது. மேற்படி பொது ஏலத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கும் தடை விதித்து தமக்கே மேலும் இரு ஆண்டுகளுக்கு குத்தகையை நீடித்து வழங்க வேண்டும் என கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள தற்போதைய குத்தகைதாரர்கள் உயர்நிதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். | 101) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| குத்தகைதாரர் பெயர் | குத்தகை இனம் | வழக்கு எண். |
|---|---|---|
| 1.திரு.சி. சேர்மப்பாண்டி | பழைய பேருந்துநிலைய சைக்கிள் ஸ்டாண்டு | |
| 2.திரு எஸ். வேலு | ஜெயராஜ் ரோடு சைக்கிள் ஸ்டாண்டு | |
| | புதிய பேருந்துநிலைய சைக்கிள் ஸ்டாண்டு | |

| | | |
|---|---|---|
| 3.திரு. எஸ். சுப்புக்குட்டி | புதிய பேருந்துநிலைய சைக்கிள் ஸ்டாண்டு | WP(MD) No 2236/2010 |
| 4.திரு.பி. பிரசன்ன பிரபு | புதிய பேருந்துநிலைய பேரூந்து நுழைவுக் கட்டணம் | WP(MD) No 2240/2010 |
| 5.திரு. மோசஸ் ராபின் | பழைய பேருந்துநிலைய பேரூந்து நுழைவுக் கட்டணம் | |
| 6.திரு.ஆர்.சந்திரசேகர் | எஸ்.எஸ். தெரு மார்க்கட் | WP(MD) No 2238/2010 |
| 7.தி ரு எஸ். வேலு | சிதம்பர நகர் மார்க்கட் | |
| 8.திரு கே. பாஸ்கர் | கீழரதவீதி மார்க்கட் | |
| 9.திரு எஸ். வேல்ராஜ் | கோபால்சாமி தெரு மார்க்கட் | |
| 10,திருமதி. ஜே. நிர்மலா | தச்சர் தெரு மார்க்கட் | |
| 11.திரு. கே. சிம்சன் | வி.இ. ரோடு மார்க்கட் | |
| 12.திரு எஸ்.டி. மனோகர்ராஜ் | ஆடு அடிக்குமிடம் கட்டண வசூல் 5, 17, 21, 25, 38, 43, 48, 50 தவிர இதர வார்டுகள் | WP(MD) No 2241/2010 |
| 13.திரு ஆர்.சி. கண்ணன் | ஆடு அடிக்குமிடம் கட்டண வசூல் 5, 17, 21, 25, 38, 43, 48, 50ஆகிய வார்டுகள் | |
| 14.திரு.டி. அந்தோணிராஜ் | பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பறை | WP(MD) No 2239/2010 |
| 15.திரு.ஜே.வி. சுரேஸ்குமார் | புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பறை | |
| 16.திரு.ஆர்.சின்னதம்பி | ராஜாஜி பார்க் கட்டண கழிப்பறை | |
| 17.திரு.எஸ்.மனோாகரன் | மாசிலாமணி பார்க் கட்டண கழிப்பறை | |
| 18.திரு.எஸ்.ஜெபஸ்தியான் | தெற்கு காட்டன் சாலை கட்டண கழிப்பறை | |
| 19.திரு.எஸ். கணேசன் | பாளையங்கோட்டை ரோடு கட்டண கழிப்பறை | |
| 20.திரு.எஸ். டி. மனோகர்ராஜ் | புதிய பேருந்து நிலைய செய்தித்தாள் விற்பனை | WP(MD) No 2237/2010 |
| 21.திரு. ஆர். தன முருகன் | பழைய பேருந்து நிலைய பூ வியாபாரம் | |
| 22.திரு. ஆர். சின்னத்தம்பி | புதிய பேருந்து நிலைய வளையல் வியாபாரம் | |
| 23.திரு.ஜி. குருசாமி | பழைய பேருந்து நிலைய வளையல் வியாபாரம் | |
| 24.திரு. ஆர். சங்கரராமன் | பழைய பேருந்து நிலைய செய்தித்தாள் விற்பனை | |
| 25.திருமதி ஆர். முத்துலட்சுமி | தங்கும் விடுதி உரிமம் | WP(MD) No 2035/2010 |

மேற்படி ஏழு வழக்குகளில் மாநகராட்சி சார்பில் மாநகராட்சி வழக்கறிஞர் திரு. கடற்கரை ஆஜராகவும் மேற்படி வழக்குகளுக்கு ஆகும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு 1)** மேற்படி ஏழு வழக்குகளிலும் வழக்கறிஞர் திரு. கடற்கரை அவர்களை ஆஜராக அனுமதிக்கலாம்.

2) மேற்படி வழக்குகளுக்கு ஆகும் செலவினத்திற்கும்அனுமதிக்கலாம்.

அ16/1573/2010

| | | | |
|---|---|---|---|
| | 35. | இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 21 கதவு எண் 22 சி/1 சந்தை ரோடு (வரிவிதிப்பு எண் 210653) கட்டுமானது தூய பேருது ஆலய வளாகத்திற்குள் அமைந்துள்ள கூடுதல் ஜெபவழிபாட்டு தளம் எனவும் மேற்படி கட்டிடத்தில் ஆலய வழிபாடு மற்றும் அதனை சார்ந்த சிறுவர் சிறுமியர் ஆராதனைகள் ஜெபக்கூட்டங்கள் மற்றும் தியானக்கூட்டங்கள் ஆகியவற்றிற்காக எவ்வித கட்டணம் இன்றி இலவசமாக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்குமாறு ஆலய குருவானவர் இடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. | 102) மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படும் எனக் கருதுவதால் பொருளில் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | | குருவானவர் இடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.<br><br>வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் அவர்களின் அறிக்கையில் மேற்படி கட்டிடமானது இறைவழிபாட்டிற்கும் சிறுவர் சிறுமியர்க்கு வேதபாடம் கற்றுத்தரும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளனர். மேலும் மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர். அதன் அடிப்படையில் மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – வார்டு 21 சந்தை ரோடு கதவு எண் 22சி/1 (வரிவிதிப்பு எண் 210653) கட்டிடத்திற்கு சொத்துவரி நடப்பு ஆண்டுவரை ரூ 526834 நிலுவையாக உள்ளது அதனை செலுத்தும்பட்சத்தில் மேற்படி கட்டிடத்திற்கு 2009–2010 (2) அரையாண்டு முதல் தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் பிரிவு 123(எ)ன் கீழ் சொத்துவரி விதிபிப்பிலிருந்து விலக்கு அளிக்கலாம்.<br><br>அ4/18913/09 | விலக்கு அளிக்கத் தேவையில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. |
| | 36. | தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு காட்டன் தெரு காரப்பேட்டை பள்ளி அருகில் உள்ள வடிகால் தற்போது கச்சா வடிகால் மூலமாக கடலுக்கு செல்கிறது, எனவே மழைக்காலங்களில் அடைப்பு ஏற்படுவதினால் அவ்விடத்தில் வடிகால் புதியதாக அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூபாய் 4000000/–க்கு (ரூபாய் நாற்பது இலட்சத்திற்கு) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – 1. மதிப்பீடு தொகை அனுமதிக்கலாம்.<br><br>2. மேலும் அதற்குரிய செலவினத்தை பாதாள சாக்கடை திட்டத்தில் வசூல் செய்யப்படும் பொதுமக்கள் பங்கு தொகையிலிருந்து ஈடு செய்யலாம்.<br><br>ம.ப.எண்.202/09–10 | 103) அலுவலகக் குறிப்பு 1 மற்று. 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 37. | சென்னை, நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண். 2021/2010/MCA நாள் 1–2–2010 சுற்றறிக்கையில் சென்னை இயக்குநர், மக்கட்தொகை கணக்கெடுப்பு அவர்களின் 8–1–2010ஆம் தேதிய No. A. 33001/2010/Admn. கடிதத்தில் 2011 மக்கட்தொகை கணக்கெடுப்பு பணிக்காக உதவியாளர் ( UDC) , இளநிலை உதவியாளர் (LDC) மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்கள்1–1–2010முதல் 18 மாதங்களுக்கு தோற்றுவித்துக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்– பட்டுள்ளது.<br><br>மேலும் மாநகராட்சிகளில் பணிபுரியும் நபர்களில் போதிய நபர்கள் உள்ள நிலையில் தகுதிவாய்ந்த எழுத்தர்களையே இப்பணியிடங்களில் பணியமர்த்திக்கொள்ளலாம் எனவும், இப்பணியிடங்களுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் மாத தொகுப்பூதிய அடிப்படையில் (உதவியாளருக்கு மாதம் ரூ 12,000/–ம் , இளநிலை உதவியாளருக்கு மாதம் ரூ 10,000/–ம்) ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களை நியமித்துக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ 5000/–ம் தொகுப்பூதியத்தில் ஒரு அலுவலக உதவியாளர் பணியிடமும் நியமித்துக்கொள்ளத் தெரிவிக்கப்பட்டது.<br><br>இப்பணியிடங்களுக்கான செலவீனங்கள் முதலில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மத்திய அரசிடமிருந்து மீளப்பெறப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இப்பணிக்காக பணியமர்த்தப்படும் எழுத்தர்களின் ஊதிய செலவீனங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் தங்களுடைய பட்ஜெட் மதிப்பீட்டில் நடப்பு மற்றும் அடுத்து வரும் நிதியாண்டுகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இம்மாநகராட்சியில் போதிய எழுத்தர்கள் இல்லாததால் 2011 மக்கட்தொகை | 104) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்கெடுப்பு பணிக்காக உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களையும் ஒரு அலுவலக உதவியாளரையும் நியமித்துக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – 1. அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி பணியிடங்களுக்கு உத்தேச செலவு ரூ 4,86,000/– அனுமதிக்கலாம்.<br>சி1. 9204/2009 | |
| | 38 | இம்மாநகராட்சி பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக செயல்படுத்தும் அனைத்து குடிநீர் திட்டங்களுக்கும் நூற்றுவீதக் கட்டணத்தை ஒரே சீராக 5% நிர்ணயித்து நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (கு.வ 4) துறை அரசாணை (நிலை) எண்.34 நாள் 15.02.2010இல் கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிட்டுள்ளது.<br><br>1)ஏற்கனவே தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் III ன் கீழ் அமைந்த மாநில திட்ட அனுமதிக்குழுவின் முதற்கூட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் ஒப்புக்கொண்டுள்ளவாறும் தமிழ்நாடு மூன்றாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்து அதனை அரசு ஏற்று சட்டப்பேரவையில் வைத்துப் பதிவு செய்துள்ளவாறும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர்ப்புற உள்ளாட்சியமைப்புகளுக்காக செயல்படுத்தும் அனைத்து குடிநீர்த திட்டங்களுக்கும் நூற்று வீதக் கட்டணம் ஒரே சீராக 5% என நிர்ணயம் செய்யப்படுகிறது.<br><br>2)இக்கட்டண வீதம் இந்த ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும். மேலும் இவ்வாளை வெளியிடப்படும் நாள் முதல் நிர்வாக ஒப்புதல் பெறும் அனைத்து குடிநீர் திட்டங்களுக்கும் மேற்கண்ட நூற்றுவீதக் கட்டணம் பொருந்தும்.<br><br>3)குறைந்தபட்ச தேவைக்கான திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்டங்களுக்கு தற்போது விதிக்கப்படும் 13% நூற்றுவீதக் கட்டணமே தொடரும்.<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – 1 முதல் 3 வரை மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ3/3526/2010 | 105) அலுவலகக் குறிப்புப் படி பதிவு செய்யப்பட்டது. |

<table>
<tr><td></td><td>39.</td><td>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட மாடுகள் அறுக்கும் இடத்தில் கடடணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2010-2013 மூன்று ஆண்டு தொகுப்பில் 2010-2011ம் ஆண்டு உரிமத்திற்கு 18-3-2010 24-3-2010 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஒருவரும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை. மூன்றாம் முறையாக 29-3-2010ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர். முகவரி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு. எஸ். ஜாண்சன்<br>93ஐ/26பி அசோக்நகர் 7ம் தெரு<br>தூத்துக்குடி</td><td>ரூ 57,000/–</td></tr>
<tr><td>2</td><td>திரு என். மீனாட்சி விஸ்வநாதன்<br>26ஐ பிரையண்ட் நகர் 4ம் தெரு<br>தூத்துக்குடி.</td><td>ரூ 40,000/–</td></tr>
</table>
மேற்படி இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு – மேற்படி உரிமத்திற்கு கடந்த 2009–2010ம் ஆண்டிற்கு பலமுறை ஏலம் நடத்தப்பட்டும் ஒருவரும் ஏலம் கோரவோ ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவோ முன்வரவில்லை. 2007–2008ம் ஆண்டிற்கு ரூ 100000/–ம் 2008–2009ம் ஆண்டிற்கு ரூ 90000/– குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. நடப்பு 2010–2011ம் ஆண்டிற்கு 18–03–2010 மற்றும் 24–3–2010 ஆகிய தேதிகளில் இருமுறை ஏலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மூன்றாம் முறையாக 29–3–2010ல் ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு எஸ். ஜாண்சன் என்பவர் ரூ 57000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்.<br><br>
கடந்த ஆண்டில் (2009–2010) ஒருவரும் ஏலம் எடுக்காததால் அலுவலகம் மூலம் வசூல் பணி மேற்கொண்டதில் ரூ 74960/– வருவாய் கிடைத்துள்ளது.<br><br>
நடப்பு ஆண்டிற்கு (2010–2011) திரு எஸ். ஜாண்சன் என்பவர் கோரியுள்ள தொகை ரூ. 57000/– கடந்த ஆண்டு அலுவலக வசூலைவிட்டு 17960/– குறைவாக உள்ளது. மூன்றாண்டு சராசரி ரூ 88320/–ஐ விட ரூ 31320/– குறைவாக உள்ளது.<br><br>
இருப்பினும் இவ்வாண்டும் அலுவலகம் மூலம் வசூல் பணி மேற்கொண்டால் குறைந்தபட்சம் ஒரு பணியாளார் மேற்படி பணிக்கு நியமிக்கப்பட்டாலும் ஊதிய செலவு உத்தேசமாக ( ரூ. 10120 X 12) ரூ 121440/– வழங்கப்பட வேண்டும். இச் செலவினம் மேறபடி குத்தகை முலம் கிடைக்கப்பெறும் வருமானத்தை விட ரூ. 46480/– கூடுதலாக ஆகிறது. மேலும் மேற்படி பணிக்கு தேவையான ரசீதுகளும் அச்சடிக்கப்பட வேண்டும்.<br><br>
எனவே மேற்கூறிய காரணங்களால் திரு. எஸ். ஜாண்சன் என்பவரின் ரூ 57000/–க்கான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ளலாம்.<br><br>
ந.க.எண். 1059/09/அ16</td><td>106) அலுவலகக் குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>40</td><td>இம்மாநகராட்சி பகுதியில் தற்போது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிந்த சாலைகளில் சாலைகள் மிகவும் பழுதடைந்து மேடும் பள்ளமுமாக உள்ளதால் பாத சாரிகள் நடந்து செல்லவும், இருசக்கர வாகனங்கள் மற்றம் நான்கு சக்கர இலகு மற்றும் கனரக வாகன போக்குவரத்து மிகவும் கடினமாக உள்ளது. எனவே இம்மாநகராட்சி பகுதியில் உள்ள கீழ்க்கண்ட சாலைகளில் தார் சாலை அமைக்கும் பணி மிகவும் அத்தியாவசியமாக உள்ளது. எனவே கீழ்க்கண்ட 12 சாலைகளில் தார் சாலை அமைக்க உள்ளுர் திட்ட குழுமத்திற்கு பிரேரனை சமர்ப்பிக்க மாமன்ற அனுமதி வேண்டுப்படுகிறது.</td><td>107) அலுவலகக் குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| வ. எ. | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | அமெரிக்கன் ஆஸ்பத்திரி மெயின் ரோட்டில் தார் சாலை மேம்பாட்டு பணிகள் செய்தல் | 25.50 |
| 2 | ஸ்டேட்பாங்க் காலனி முதல் எட்டையாபுரம் ரோடு வரை தார் சாலை அமைத்தல் | 28,55 |
| 3 | அம்பேத்கர் நகர் மெயின் ரோடு சந்திப்பு முதல் ஸ்டேட் பாங்க் காலனி சந்திப்பு வரை தார் சாலை அமைத்தல் | 15.85 |
| 4 | டி.எஸ்.எப். சந்தி முதல் அம்பேத்கர் நகர் மெயின் ரோடு சந்திப்பு வரை தார் சாலை அமைத்தல் | 11.20 |
| 5 | கிருஷ்ணராஜபுரம் முதல் டி.எஸ்.எப். சந்தி வரை தார் சாலை அமைத்தல் | 15.85 |
| 6 | எஸ்.எஸ். மாணிக்கபுரம் மெயின் ரோட்டில் தார் சாலை மேம்பாட்டு பணிகள் செய்தல் ( சாமுவேல்புரம் முதல் கிருஷ்ணராஜபுரம் வரை) | 17.50 |
| 7 | அண்ணா நகர் 5வது குறுக்குத் தெருவில் தார் சாலை அமைத்தல் | 11.25 |
| 8 | இராமேஸ்வரம் மெயின் ரோடு தாா சாலை மேம்பாட்டு பணிகள் செய்தல் ( அமெரிக்கன் ஆஸ்பத்திரி சந்திப்பு முதல் செயின்ட் தாமஸ் பள்ளி வரை) | 12.45 |
| 9 | சிவந்தாகுளம் மெயின் ரோட்டில் தார் சாலை மேம்பாட்டு பணிகள் செய்தல் | 14.00 |
| 10 | போல்டன்புரம் 2ம் தெருவில் தார் சாலை அமைத்தல் | 8.50 |
| 11 | கணேஷ் நகர் மெயின் ரோட்டில் தார் சாலை அமைத்தல் | 15.00 |
| 12 | ராமசாமிபுரம் முதல் சிதம்பர் நகர் வரை மெயின் ரோடு வரை தார் சாலை அமைத்தல் | 19.75 |
| | **மொத்தம்** | **195.40** |

மேற்கண்ட 12 சாலை பணிகளை ரூ.195. 40 லட்சம் மதிப்பீட்டில், உள்ளூர் திட்டக்குழுமம் நிதியினை பெற்று பணிகள் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலாம்

6155 / 2010 / இ1

| | | | |
|---|---|---|---|
| | 41 | இம்மாநகராட்சியின் 2010–2011ம் ஆண்டின் உத்தேச வரவு மற்றும் செலவு மதிப்பீடு மற்றும் 2009–2010ம் வருடத்திய திருத்திய வரவு மற்றும் செலவு மதிப்பீடு கீழ்காணும் நிதிகளுக்கு (1) வருவாய் (ம) மூலதள நிதி (2) குடிநீர் (ம) வடிகால் நிதி (3) கல்வி நிதி ஆகிய வகைகளுக்கு ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** –மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>பி7/ 3909/2010 | 108) அலுவலகக் குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது |

மாமன்றம், தூத்துக்குடி
நாள் 12–04–2010

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி